# செல்வம் தரும் அதிபதி குபேரர்

சாந்திப்பிரியா



குபேரனை வழிபடுபவர்களுக்கு வற்றாத செல்வமும் சகல வசதிகளும் பெருகும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உள்ளது. முதலில் குபேரன் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். பிரும்ம தேவரின் ஒரு புத்திரரான புலஸ்தியர் என்ற முனிவருக்கு விஸ்வரா என்ற மகள் இருந்தார். அந்த விஸ்வராவின் புதல்வரே குபேரன். குபேரன் இராமாயண கதாபாத்திரத்தில் வரும் இராவணனுடைய ஒன்றுவிட்ட சகோதரன் என்றும் கூறுவார்கள். அந்த குபேரனே முதலில் இலங்கையை ஆண்டு வந்தார் எனவும், அவரை விரட்டி அடித்துவிட்டு இராவணன் ஆட்சியைப் பிடித்துக் கொண்டாராம். அது மட்டும் அல்ல குபேரன் அமர்ந்து கொண்டு செல்லும் விமானத்தில் இருந்து பொன்னும் பொருளும் கொட்டிக் கொண்டே இருந்ததினால் அதையும் இராவணள் பிடுங்கிக் கொண்டான். அதனால்தான் இராவணனை செல்வத்தை அவர் ஆண்ட இராஜ்ஜியத்தையும் இழக்க சாபமிட்டாராம். குபேரர் யட்சகர்களுடைய தலைவர். யட்சகர்கள் மனிதர்களுக்கு உதவுபவர்கள்.

ஒரு முறை குபேரன் சிவபெருமானை துதித்து கடுமையான தவம் இருந்தார். அவருடைய தவத்தை மெச்சி அவர் முன் சிவபெருமானும் பார்வதியும் தோன்றி அவருக்கு என்ன வேண்டும் எனக் கேட்ட பொழுதுஈ குபேரன் ஒரு கணம் தன்னை மறந்து பார்வதியின் அழகைக் கண்டு சொக்கி நின்று விட்டார். படபடவென அவருடைய ஒரு கண் துடித்தது. மனம் அவளுடைய அழகில் மயங்கி நின்றது. அதனால் கோபமற்ற பார்வதி அவருடைய ஒரு கண்ணை அழித்தார். தனது தவறை உணர்ந்த குபேரன் பார்வதியிடம் மன்னிப்புக் கேட்டு அழுது புலம்ப, அவருக்கு இழந்த கண்ணுக்குப் பதிலாக மற்றொரு சிறு கண்ணை அவருக்குத் தந்தார். அதனால்தான் அவருடைய ஒரு கண் சிறியதாகவும், இன்னொரு கண் பெரியதாகவும் உள்ளது. அது மட்டும் அல்ல தன்னுடைய அழகில் மயங்கி தன்னையும் ஒரு சாதாரணப் பெண்ணாகப் பார்த்ததினால் அவருடைய அழகைப் பறித்து அவரை விகாரமான உருவைக் கொள்ளச் செய்தாள். விளைவு தொந்தியும், தொப்பையுமாகவும், பற்களை காட்டிக் கொண்டு நிற்பவராகவும் மாறினார். அவருடைய அனைத்துச் செல்வங்களும் அவரை விட்டு விலகின. சாப விமோசனம் பெற திருக்கோளூர் என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்த நதியில் நீராடி பெருமாளை வேண்டிக் கொண்டாராம்.




குபேருடைய ஒரு சிலையும் மற்றொரு உருவமும்

அதன் பின் அவருடைய தவத்தை மெச்சிய பார்வதி அவரை தன்னுடைய தானியத்தை காப்பவராக நியமித்து வடக்கு திசை அதிபராக்கினார். குபேரருடைய வேலை பணத்தைக் காப்பாற்றுவதே. அனைத்து செல்வத்தையும் இலஷ்மி தேவியே தந்தாலும், அதன் கணக்கு வழக்குகளை வைத்திருப்பவர்தான் குபேரர். குதிரை அவர் வாகனம். ஒரு

முறை திருப்பதி வெங்கடாசலபதியே சிவபெருமான் மற்றும் பிரும்மாவின் முன்னிலையில் குபேரரிடம் தனக்கு திருமணம் செய்து கொள்ள கடன் வாங்கியதாகவும், அந்தப் பணத்தை கலிகாலத்தில் பெருமாளுடைய பக்தர்கள் மூலம் வட்டியும் முதலுமாக திருப்பித் தந்துவிடுவதாகக் கூறியதினால்தான் பெருமாளுடைய பக்தர்கள் பெருமாள் கடனைத் தீர்க்க குபேரரை வணங்கி காணிக்கை செலுத்துகின்றார்கள்.இலஷ்மி தேவியின் செல்வத்தை காப்பதினால் குபேரருடைய அருள் இருந்தால்தான் செல்வம் கிடைக்கும். அதற்கு அவர் சிபாரிசு தேவை.

புத்த மதத்திலும் குபேரன் உண்டு. வயிறு பெருத்து கைகளை உயரத் துாக்கி வைத்தபடியும், பணக் குவியல் மீது அமர்ந்தபடியும் காணப்படும் அவர் ஆமை வாகனத்தில் உலா வருகிறார். அவருடைய பெயர் சிரிக்கும் புத்தர், அதாவது ‘லாப்பிங் புத்தாவாம்’.

குபேர ஸ்லோகம் என்பதை கீழ் கண்டபடி குங்குமத்தினால் மாவு கோலம் போட்ட பின் 108 முறை ஸ்லோகத்தைக் சொன்னால் பணத் தட்டுப்பாடே இருக்காது.

குபேர கோலம் மற்றும் ஸ்லோகம்

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |

முதல் ஸ்லோகம் இது

ஓம் யஷாய குபேராய வைஸ்ரவணாய
தனதாந்த்யாதி பதயே
தநதாந்ய ஸம்ருத்திம்மே
தேஹி தாபயஸ்வாஹா

## இரண்டாம் ஸ்லோகம் இது

ஓம் யக்ஷாய குபேராய வைஷ்ரவணாய
துனதான்யாதி பதயே
தனதான்ய சம்ருத்திமே
தேஹி தபயாய ஸ்வாஹா